தேர்தல் ஆணைக்குழுவின் அங்கத்தவரான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் மீது ஊடகங்களினால் தொடர்ந்தும் பக்க சார்பான விமர்சனங்கள் இந்நாட்களில் முன்வைக்கப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. பிரச்சினை என்னவென்றால், சில ஊடகங்கள் பக்க சார்பான தகவல்கள் மற்றும் கருத்துக்களை வழங்குவதோடு நின்றுவிடாமல் துல்லியத்தன்மை கேள்விக்குள்ளாக்கும் விதத்தில் செய்தியறிக்கைகள் மற்றும் ஆசிரியர் தலையங்கங்களைப் பிரசுரிப்பதாகும். கடந்த மே 24ஆம் திகதி "ரட்ணஜீவன் பூல் (fool)" என்ற தலைப்பில் திவயின பத்திரிகையில் வெளியான ஆசிரியர் தலையங்கம் இதற்கு உதாரணமாகும்.
இங்கு திவயின ஆசிரியர் தலையங்கத்தினூடாக மேற்கொள்ளப்படுவது ரட்ணஜீவன் ஹுலுக்கு எதிராக தாக்குதல் மட்டும் அல்ல. ஊடகங்கள் மூலமாக பிரசுரிக்கப்பட்டவாறு சம்பவங்கள் நடைபெறவில்லை என்று தெளிவுபடுத்தி மே மாதம் 20ஆம் திகதி அன்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவினால் திவயின பத்திரிகையின் பிரதான ஆசிரியருக்கு உத்தியோகபூர்வமாக அனுப்பப்பட்ட கடிதத்தையும் இங்கு கருத்தில்கொள்ளவில்லை என்று பார்க்கக்கூடியதாக உள்ளது.

அதன்படி, தேசப்பிரியவினால் மே 20ஆம் திகதி அன்று அனுப்பட்ட கடிதத்தில் நிராகரிக்கப்பட்ட விடயங்களை மீண்டும் மீண்டும் உண்மை என காண்பிப்பதற்கு மே 24ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட திவயின ஆசிரியர் தலையங்கம் முற்படுகின்றது. இது துல்லியத்தன்மையைக் கடைப்பிடிப்பதை வெகுவாக மீறுவதுமட்டுமல்லாது வாசகர்களைத் தவறாக வழிநடத்துகிறது.

ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்ட கடிதத்தை விட, ரட்ணஜீவன் ஹூல், தமக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு விளக்கம் அளிக்குமுகமாக மே மாதம் 21 திகதி கொழும்பு டெலிகிராப் ஊடாக பிரசுரிக்கப்பட்ட அறிக்கை குறித்தும் திவயின ஆசிரியர் தலையங்கம் குறிப்பிடவில்லை.
இந்த சம்பவத்தை சித்திரித்த விதம் தவறு என சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தபோதும், திவயின தொடர்ந்தும் தவறான தகவல்களை மக்களிடையே கொண்டு செல்வதன் மூலம் பாரதூரமான முறையில் விழுமியங்களை மீறுகின்றது. இது மிகவும் பொறுப்பற்ற ஊடக நடைமுறை.

பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூலின் அறிக்கை உள்ளடக்கிய கொழும்பு டெலிகிராப் கட்டுரை (திவயின ஆசிரியருக்கு தேர்தல் ஆணைக்குழு அனுப்பிய கடிதம் தொடர்பான விவரங்களும் இக்கட்டுரையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.)

https://www.colombotelegraph.com/index.php/elilini-hoole-defamation-by-several-news-outlets/?fbclid=IwAR1VKQ1-T-5oJLJGzWH0crA2tL_a5rCTh0k19xKbgjJFGZtmQkd1R2DuxNY

**#MediaEthics #lka #SinhalaPress #SundayDivaina**